தினமலர் 17/09/2017

# 75 விடுதிகளுக்கு நோட்டீஸ்!

## உணவு பாதுகாப்பு துறை அதிரடி

**கோவை, செப். 17–**

தரமற்ற உணவு தயாரித்ததாக, 75 அரசு, தனியார் பள்ளி, கல்லூரி விடுதிகளுக்கு, உணவு பாதுகாப்பு அதிகாரிகள் நோட்டீஸ் வழங்கினர்.

கோவை மாவட்டத்தில் அரசு, தனியார் பள்ளி, கல்லூரி மாணவர்கள் தங்குவதற்கென, 230க்கும் மேற்பட்ட விடுதிகள் உள்ளன. இவ்விடுதிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு குறித்து, தொடர் புகார்கள் உணவு பாதுகாப்புத்துறைக்கு சென்றன.

இதையடுத்து, கடந்த வாரம் முதல் உணவுத் துறை அதிகாரிகள், 45 அரசு பள்ளி, கல்லூரி விடுதிகள், 167 தனியார் விடுதிகள் என, 212 விடுதிகளில் ஆய்வு நடத்தினர். விடுதியில் தயாரிக்கப்படும் உணவின் தரம், லைசென்ஸ் ஆய்வு செய்யப்பட்டது. இதில், தரமற்ற உணவு தயாரித்த மற்றும் லைசென்ஸ் இல்லாமல் செயல்பட்ட, 75 விடுதிகளுக்கு நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் தமிழ்செல்வன் கூறியதாவது:

மாவட்டத்தில் அரசு, தனியார் பள்ளி, கல்லூரிகளில் நடத்தப்பட்ட ஆய்வில், 61 விடுதிகளுக்கு தரமற்ற முறையில் உணவு தயாரித்தது, 14 விடுதிகள் லைசென்ஸ் இல்லாமல் செயல்பட்டதற்காக நோட்டீஸ் வழங்கப்பட்டது. தொடர்ந்து விடுதிகளில் ஆய்வு நடந்து வருகிறது.

உணவு தயாரிப்பு பணியில் ஈடுபடுவோர், கட்டாயம் மருத்துவ சான்றிதழ் வைத்து இருக்க வேண்டும். தொற்றுநோய் உள்ளவர்களை, பணியில் அமர்த்த கூடாது. தரமான உணவை மட்டுமே மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என, விடுதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு, அவர் கூறினார்.